கேக், குளிர்பான
தயாரிப்புகள் மற்றும்
கைக்கடிகாரங்களுக்கு

ராஜூ ஸ்ரோர்ஸ்
67, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-9105)

பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

அழகுசாதன அலங்கரிப்பு
விளையாட்டு
பொருள்களுக்கு

ராஜூ ஸ்ரோர்ஸ்
67, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-9105)

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 29 புதன்கிழமை (14 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 291

ஆணைக்குழு நியமிக்க சட்டமூலம்

1988 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமற் போனவர் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

இதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் இம் மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும்.

ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்காததால் இவ்வாறு முடிவு செய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

ஆயுதக் களைவு நிபந்தனையை இக்கட்டத்தில் விதிக்க முடியாது!

படையினர் மத்தியில் அனுருத்த

கொழும்பு, செப். 14

விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்ற நிபந்தனையை இக்கட்டத்தில் விதிக்க முடியாது.

பாதுகாப்புப்பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு படை முகாம்களுக்கு பிரதி அமைச்சர் அண்மையில் சென்ற போது, சிப்பாய் ஒருவர், விடுதலைப்புலிகளிடம் இருந்த ஆயுதங்களை களைய அரசு தயாராக இருக்கின்றதா? என்று கேட்டார். அதற்கே அமைச்சர் முன்கண்டவாறு பதிலளித்தார்.

படையில் சேர்க்கப்படுவர்

'இதுதான் ஆரம்பம் இந்த நிலையில் நிபந்தனைகள் விதிக்க முடியாது' — என்றார் அமைச்சர்.

சமாதான பேச்சுவார்த்தை வெற்றி அடைந்து விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து விட்ட பின்னர் புலிகள் இயக்கப் போராளிகள் ஆயுதப் படையிலும் பொலிஸிலும் சேர்க்கப்பட முடியும். அதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை — என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

சந்திரிகா தலைமையிலான

புனர்வாழ்வுச் செயலணி திங்களன்று கூடுகின்றது

கொழும்பு, செப். 14

வடக்கு — கிழக்கு புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல் செய்வதற்காக பிரதமர் சந்திரிகா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள எட்டு அமைச்சர்கள் கொண்ட செயலணிக்குழு எதிர்வரும் திங்கட்கிழமை முதன் முறையாகக் கூடுகிறது.

இந்த விசேட குழுவில் பொது நிர்வாக, உள்ளூராட்சி, கைத்தொழில்துறை அமைச்சர் திரு. ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, கப்பல் துறை, துறைமுகங்கள் மற்றும் சமூக மறுவாழ்வு அமைச்சர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப், நீர்ப்பாசன, மின்சக்தி சக்திவள அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான திரு. அனுருத்த ரத்வத்தை, கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர்

இந்திகா குணவர்த்தனா, இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை மற்றும் கிராமிய அபிவிருத்தித்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா, கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான, வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், போக்குவரத்து நெடுஞ்சாலைகள், சூழல் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ஸ்ரீமணி அத்துலத் முதலி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தச் செயலணி நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள், கல்வி, மின்சக்தி, எரிபொருள் போன்ற பல்வேறு விடயங்களை ஆராய்ந்து, அவற்றிற்குரிய நிவாரணங்களை வழங்குவதற்குச் சிபார்சு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-4)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப் 14

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

முச்சந்தி முரளி



செயலணி சும்மா பேருக்கு கூடினால் மட்டும் காணாது...! செயலில் எல்லோ காட்ட வேணும்.....!!

காங்கேசன் ஆலைகளை இயங்க வைக்க முயற்சி

கொழும்பில் உயர்மட்ட மாநாடு

யாழ்ப்பாணம், செப். 14

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சீமெந்து நிறுவனம் ஆகியவற்றின் ஆலைகளை மீண்டும் திறந்து உற்பத்தியை ஆரம்பிப்பது தொடர்பாக உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இரு ஆலைகளையும் புனரமைத்து வேலைகள் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்கு நேற்று காலை கொழும்பில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இந்த இரு ஆலைகளின் முகாமைத்துவ அதிகாரிகளும் இந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆலைகளில் உள்ள பழுதுகளை திருத்தி ஆலைகளை இயக்குவது தொடர்பாக ஆராய்ந்து முடிவு செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் —

அக்குழு விரைவில் காங்கேசன்துறைக்கு செல்ல விருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவ்விரு ஆலைகளை புனரமைக்கத் தேவையான நிதியில் ஒருபகுதியை வழங்க அந்த ஆலைகளின் முகாமைத்துவ அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

மின்நிலையத்தை இயக்குவது குறித்தும் ஆராயப்படும்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தின் மின் நிலையத்தை இயக்குவது குறித்து ஆராய்வதற்கும் விசேட குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

இக்குழுவில் லங்கா சிமெந்து நிறுவன அதிகாரிகளும், இலங்கை மின்சாரசபை அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் காங்கேசன்துறைக்குச் சென்று மின் நிலையத்தில் உள்ள [illegible]றும் ஏற்பாடுகள் குறித்தும் ஆராய்வார்கள். (ஒ-3)

சமாதான சூழ்நிலை ஏற்பட போர் நிறுத்தம் அவசியம்!

பி. பி. ஸி. பேட்டியில் பிரபா வலியுறுத்து

லண்டன், செப்ரெம்பர் 14

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சமாதான சூழ்நிலை — சகஜநிலை — அவசியம், அத்தகைய சூழ்நிலை உருவாகுவதற்கு போர்நிறுத்தம் அவசியமானதாகும்.

— இவ்வாறு பி.பி.ஸி, தமிழ்ச்சேவைக்கு அளித்த பேட்டியில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கூறியிருக்கிறார்.

பி. பி. ஸி. செய்தியாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் அண்மையில் யாழ். வந்திருந்தபோது தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேட்டி கண்டிருந்தார் என்பது தெரிந்ததே.

அந்தப் பேட்டியை பி.பி.ஸி தமிழோசை நேற்றிரவு ஒலிபரப்பியது. அப்பேட்டியின் முழுவிவரம் வருமாறு:-

யுத்த நிறுத்தம் கொண்டு வருவதற்கு அரசு தயங்குவது போல் தெரிகிறது

★ கேள்வி:- பிரபாகரன் அவர்களே! புதிய பிரதமர் சந்திரிகா, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தனது முக்கியமான பணிகளில் ஒன்றாக இருக்கும் என்றும் — இது தொடர்பாக தான் உங்களுடன் பேச்சு நடத்தப்போவதாகவும் — கூறியிருக்கிறார். பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு வருவதாக நீங்கள் கருதுகிறீர்களா?

பிரபா:- நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் தயார். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு சுமுகமான சூழ்நிலையில் — ஒருசமாதானமான சூழ்நிலையில் — நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம்.

புதிய அரசாங்கம் பொருளாதாரத் தடையைத் தளர்த்தியிருக்கிறது இது ஒரு ஆக்கபூர்வமான நல்லெண்ண நடவடிக்கை. இதனை நாம் வரவேற்கின்றோம்.

ஆயினும் பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்படவில்லை. சில அத்தியாவசியப் பொருள்களுக்கான தடை இன்னமும் நீடிக்கிறது. இது ஒரு புறமிருக்க மக்களின் போக்குவரத்துக்கான பாதைகளையும் அரசாங்கம் மூடி வைத்திருக்கிறது. இதனால் பொருளாதார நிலை சீராகப் போவதில்லை; மக்களின் துன்பச் சுமை குறையப் போவதில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர் தாயகத்தில் ஒரு சமாதான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம்;

போரை நிறுத்துவதற்குத் தயார் என நாம் அறிவித்திருக்கிறோம். ஆனால் போர் நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசு தயங்குவது போலத் தெரிகிறது. அரச படைகளின் அனர்த்தங்கள் தொடரவே செய்கின்றன. குறிப்பாக கடற்படையினரின் தாக்குதல்கள் தொடர்கின்றன: இது சமாதான சூழலுக்கு பங்கம் விளைவிப்பதாகவே அமையும். ஒட்டுமொத்தத்தில் பார்க்கும் போது தமிழ்ப் பகுதிகளில் இயல்பு நிலை இன்னமும் திரும்பவில்லை நல்லெண்ண சூழ்நிலை தோன்றி வருகிறது. ஆனால் சமாதான சூழ்நிலையும் சகஜ நிலையும் இன்னும் ஏற்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

எனவே ஒரு சுமுகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு அரசுதான் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொருளாதார அழுத்தம், போர்ச் சூழல்; நல்லெண்ணப் பேச்சுக்கு இடையூறு

★ கேள்வி:- நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்குத் தயார் என நீங்கள் கூறி வந்தீர்கள். இப்போது பொருளாதாரத் தடையை நீக்குங்கள்; போர் நிறுத்தம் அறிவியுங்கள் என நிபந்தனைகளை விதிக்கிறீர்களே.

பிரபா:- பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனை எதனையும் நாம் விதிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கு சமாதான சூழ்நிலை அவசியம் என்றே நாம் சுட்டிக் காட்டுகின்றோம். யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யாத நிலையில் போர் நடவடிக்கைகள் நிகழலாமல்லவா? சண்டையை ஒரு புறம் நடத்திக் கொண்டு சமாதானம் பற்றிப் பேசுவதில் அர்த்தம் உண்டா? இதனால்தான் சமாதானப் பேச்சுக்கு போர் நிறுத்தம் அவசியம் என நாம் கூறுகின்றோம்.

ஏனென்றால் பொருளாதார அழுத்தமும் போர் நெருக்கடியும் இருக்கும் வரை சுதந்திரமான முறையில் — பரஸ்பர நல்லெண்ணத்துடன் — பேச்சுக்களை நடத்துவது சிரமமானதாக இருக்கும்.

இதனைப் புதிய அரசு கருத்திற் கொள்ள வேண்டும். போர் நிறுத்தம் செய்வதற்கு அரசு இணங்குமானால் அதனை நல்லெண்ணத்தின் அறிகுறியாக — சமாதானத்தின் சமிக்ஞையாக — நாம் கருதுவோம்.

போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி புலிகள் பலமடைவர் என்பது தவறு

★ கேள்வி:- அரசு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக போர் நிறுத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் போர் நிறுத்தம் என்று ஏற்பட்டால் புலிப் படையினர் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இந்தப் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்துவார்கள் என்ற ஒரு கருத்து இராணுவ வட்டாரங்களில் நிலவுகின்றது. இதற்கு உங்கள் பதில் என்ன?

பிரபா:- இராணுவ வட்டாரங்களில் நிலவும் இந்தக் கருத்து முற்றிலும் தவறானது என்றே நான் சொல்வேன்.

இராணுவ ரீதியில் போர் நிறுத்தம் எமக்குச் சாதகமானதல்ல. எதிரியின் ஆயுதங்களைப் பறிப்பதிலும் அழிப்பதிலும் தான் எமது வளர்ச்சியும் பலமும் தங்கியிருக்கிறது. போர் நடவடிக்கைகள் மூலமே இது சாத்தியமாகிறது. எனவே போர் நிறுத்தம் எம்மைப் பலப்படுத்தும் என்று கருதுவது தவறு.

அப்படியிருந்தும் போர் நிறுத்தத்தை நாம் விரும்புவதன் காரணம் உண்மையான ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கேயன்றி வேறு ஒன்றிற்குமல்ல.

அடுத்ததாக, போர் நிறுத்தம் செய்யப்படாத வேளையில் திடீரென எதிர்பாராத வகையில் மோதல்கள் நிகழலாம்; உயிர்ச் சேதங்கள் ஏற்படலாம். இந்த நிகழ்வுகள் இடம்பெறும் போது அது சமாதானச் சூழ்நிலையையும் பேச்சுக்களையும் பாதிக்கும் அல்லவா?

சந்திரிகாவின் திட்டத்தை பரிசீலிக்காது கருத்துக் கூறுவது விவேகமானதல்ல

★ கேள்வி:- தமிழர்களுக்கு என்று ஒரு தாயகப் பகுதி வேண்டும் என்றே நீங்கள் வலியுறுத்தி வருகின்றீர்கள். ஆனால் சந்திரிகாவோ இந்தத் தமிழர் தாயகம் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும், வடக்கும் கிழக்கும் ஒருமிக்கிணைவது என்றும் ஒப்புக்கொள்ள முடியாதது என்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார்.

ஆனால் மாற்றியமைக்கப்பட்ட எல்லைகளுடனான வடக்கு, கிழக்கு என்ற திட்டத்தை முன்வைக்கப் போவதாகவும் கூறியுள்ளார். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

பிரபா: தமிழருக்கு ஒரு தாயகம் வேண்டும் என்பதை நான் மட்டுமல்ல தமிழினம் முழுவதுமே காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றது. இது ஒரு வரலாற்று உண்மை: வடக்கு - கிழக்கு மாகாணம் அடங்கிய பிரதேசமானது தமிழ்ப்பேசும் மக்களது — அதாவது தமிழ், முஸ்லிம் மக்களது — தாயகம். இது எங்களது நிலைப்பாடு.

பிரதமர் சந்திரிகா இந்தப் பிரச்சினையில் எவ்வித நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார் என்பது எமக்குத் தெரியாது; அவர் எவ்விதமான புதிய திட்டத்தை வகுத்திருக்கின்றார் என்றும் எமக்குத் தெரியாது. எனவே அத்திட்டத்தை பரிசீலனை செய்வதற்கு முன்பாக எமது கருத்தை தெரிவிப்பது விவேகமானது அல்ல.

பேச்சுவார்த்தையின்போது இவ்விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்பது தெரியவரும். அப்போது எமது கருத்தையும் கூறலாம்.

தமிழரின் உண்மைப் பிரதிநிதிகளான புலிகளுடனேயே அரசு பேசவேண்டும்

★ [illegible] அரசுக்கும் இடையில் [illegible] நடக்கும் பட்[சத்தில்] [illegible] ஏனைய தமிழ்க் குழுக்களும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள இணங்குவீர்களா?

பிரபா: இந்தத் தமிழ்க் குழுக்கள் தனித்தும் கூட்டாகவும் அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றன. அது

(6ம் பக்கம் பார்க்க)

உ

மல்லாகம்

பெரியதம்பிரான் தேவஸ்தானம்
அலங்கார உற்சவ
விஞ்ஞாபனம்

காலம்: **5-9-94** முதல் **19-9-94** வரை

நிகழ்ச்சிகள்

மாலை: 4-00 மணி: அபிஷேக ஆராதனை
6-00 மணி: தெய்வீகப் பேருரைகள்
(பல சைவ அறிஞர்கள் கலந்து கொள்வர்)
இரவு 7-30 மணி: உற்சவம்

வ. அப்புத்துரை
(பூசகர்)
மல்லாகம். (32875)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த ஒப்பந்த அடிப்படையிலான பதவிக்கான விண்ணப்பங்கள் 1994-09-30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி

காவற்பொறுப்பாளர்/சமையல்காரர் (ஒப்பந்த அடிப்படை)

சம்பளம்

ரூபா 3,815/- மாதமொன்றுக்கு. (நிலையானது) இத்துடன் வேலை நிறைவேற்றுப் படியாக 1994-12-31 ஆம் திகதி வரை ரூபா 613.75 உம் செலுத்தப்படும்.

தகைமைகள்

(அ) சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உரையாடுவதற்கும், எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும், ஆங்கிலம் பேசும் ஆற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஆ) தளபாடங்கள், மட்பாண்டத் தொகுதி, வெட்டுக்கருவிகளின் தொகுதி, துணிகள் என்பவற்றைப் பேணுவதிலும், சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும், அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) உணவு வகைகளை தயாரிப்பதில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

வயது

விண்ணப்ப முடிவு திகதியில் 58 வருடங்களுக்கு உட்பட்டவர்கள்.

தெரிவு

உளச்சார்பு வாய்மொழிப் பரீட்சை மூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு

மேற்குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர் கொழும்பில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் தங்கியிருந்து பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர், யாழ். பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் 23X10 ச.மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பபடும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1994-09-09

[சி-9111]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
26
—
05
—
1925

மறைவு:
15
—
08
—
1994

திருகோணமலை

பண்டிதர். எஸ். வைரமுத்து பி. ஏ

(முன்னாள் அதிபர் திருகோணமலை மேற்கு தமிழ் ம. வி., திருகோணமலை புனித சவேரியர் ம. வி.)

எங்கள் குடும்ப விளக்கின் அந்தியேட்டி கிரிகைகளும், ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இன்று திருகோணமலையில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்.

மனைவி:- திருமதி நவமணி வைரமுத்து
மகன்:- ஸ்ரீஸ்கந்தராஜா
(ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)
மற்றும் குடும்பத்தவர்கள்.

(சி/9169)

இனப்பிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி அரசமைப்பே ஒரேவழி

இனவெறியருக்கு இடம் கொடாதீர்

> ''சமாதானத்துக்கான கடைசிச் சந்தர்ப்பம்'' — என்ற தலைப்பில் சண்டே ஒப்சேர்வரில் திரு. அமரதாஸா பெர்னாண்டோ எழுதிய கட்டுரை ஒன்றில் இருந்து சில பகுதிகள்;

வெல்ல முடியாத இந்த யுத்தம் குறித்து குறிப்பாக சிங்கள பௌத்த மக்கள் களைத்துப் போயிருக்கிறார்கள்.

இந்த ஏழைகளின் தொழில் வாய்ப்பற்ற பிள்ளைகள் இராணுவத்திலும் கடற்படையிலும் சேர்கின்றார்கள்; பின்னர் யுத்த முனைகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

பௌத்த மதத்தையும் சிங்கள தேசத்தையும் காப்பாற்றுவதாகக் கூறுபவர்களின் பிள்ளைகள் கொழும்பில் சுலபமான தொழில்களில் உள்ளனர். பௌத்த தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களின் இப்போலித்தனத்தை சாதாரண சிங்களவர்கள் தற்போது அறிந்துள்ளனர்.

எனது அபிப்பிராயப்படி சுவிஸ் முறையிலான சமஷ்டி அரசமைப்பு அல்லது இந்தியபாணி அரசமைப்பு இன்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

தென் பகுதியில் உள்ள பிடிவாத சிங்கள அரசுகளுக்கு முன்னால் மிதவாதத் தமிழ்க் கட்சிகளின் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

1977 இனக் கலவரத்துக்குப் பிறகு ஜனாதிபதி ஜெயவர்த்தனா நாட்டுக்கு உரை நிகழ்த்தினார். அப்போது 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' — என்று தமிழ் மக்களை எச்சரித்தார்.

1983 இனக்கலவரம் வெடித்தது. மிதவாதத் தமிழ்த் தலைமைக்கு முடிவு கட்டப்பட்டது. சிங்கள அரசுகளைத் தாஜா செய்வது நின்றது. நிலைமை முற்றிலும் மாறியது. திரு. பிரபாகரன் தலைமையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கினர். இனவெறியர்கள் தான் நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்தனர். இனவெறியர்கள் தான் நாட்டை பிரித்தனர்.

வவுனியாவுக்கு அப்பால் அரசின் ஆணை இல்லை

இன்று, வவுனியாவுக்கு அப்பால் அரசின் ஆணை செல்லாது.

விடுதலைப் புலிகள் தங்கள் சொந்த நிர்வாகத்தை அங்கு நடத்துகின்றனர்.

அரச அதிபர் ஒரு பொம்மையாக இருக்கிறார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறி அவர் விடுதலைப் புலிகளிடம் இருந்து அனுமதி பெறவேண்டும்.

இந்த முட்டுக்கட்டையை தீர்க்க ஒரு வழி இல்லையா?

சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழியே இல்லை. அதுவே ஒரேவழி அரசியல்வாதிகளின் விட்டுக்கொடுக்காத தன்மையினால் நாடு பிளவுபட்டுள்ளது. இரண்டு பிரதான கட்சிகளுமே இதற்குப் பொறுப்பாகும்.

எப்போதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்ணுக்கு தெரியும் போது இனவெறியர்கள் யுத்தபேரிகை கொட்டுவார்கள்; அரசுக்கு அழுத்தம் கொடுப்பர்.

பொதுமக்கள் ஐக்கிய அரசு யுத்தத்தை முடிப்பதில் உறுதியாக உள்ளது. இனவெறியர்களுக்கு இந்த அரசு செவிசாய்க்கக் கூடாது.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

ஆனந்த மருத்துவ நிலையம்
HAPPY MEDICAL CENTRE

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? சரும ரோகமா? தொய்வு வியாதியா? மலேரியாவா? நீரிழிவா? உடல் மெலிவா? உடல் பருமனா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? மாதர்களின் ரோகங்களா? குழந்தைகளின் வியாதிகளா, கவலை வேண்டாம்! சிறந்த சிகிச்சையும், அரிய ஆலோசனையும் அளிக்கப்படும். தினமும் காலை 8 30 — 12-30

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M. , R. A. M. P.(Cey)
ஆனந்த மருத்துவ நிலையம்

ரயில்வே கடவையடி (ஸ்ரான்லி வீதி),
யாழ்ப்பாணம்.

தலைமை: ''சிவா வைத்தியசாலை''
384, கோவில் வீதி - நல்லூர் வடக்கு.
தினமும்: பிற்பகல் 3 முதல் 6 வரை

(32881)

இதய அஞ்சலி

எமது சக மாணவி செல்வி வே. ரூபமதியின் தந்தையார்

Dr. க. வேலாயுதம்பிள்ளை அவர்கள்

09-09-1994 இல் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

Iஆம் வருட உயிரியல் பிரிவு
மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்

[32885]

அந்தியேட்டி அழைப்பு

மலர்வு
12
08
1917

உதிர்வு
15
08
1994

அமரர்

சுப்பிரமணியம் பொன்னுத்துரை

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான எமது தலைவனின் இறுதிச் சடங்கில் கலந்தும் எமக்கு அனுதாபம் தெரிவித்தும் எமது துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள் யாவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்!

இன்று (14-9-94) நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வில் பங்கு கொண்டு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புக்கரம் கூப்பி அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்;

தபாற்கந்தோர் ஒழுங்கை,
[illegible]
[illegible] (32880)

கப்பலில் செல்லும் நோயாளர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், செப். 14

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக, கப்பலில் செல்வதற்குப் பதிவுசெய்த நோயாளர்களையும், உதவியாளர்களையும் நாளை வியாழன் காலை 6.30 மணிக்கு யாழ். பொது வைத்தியசாலைக்கு சமுகம் தருமாறு வைத்தியசாலைப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கப்பலில் செல்பவர்கள் 2 நாட்களுக்குப் போதுமான உணவு, மற்றும் குடிதண்ணீருடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-15)

போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 14

அரசாங்க, மாகாண அரசாங்க கனிஷ்ட சேவையாளர்களை பொது எழுதுவினைஞர் 2 ''ஆ'' பிரிவுக்கும் தட்டெழுத்தாளர் சேவை 2 'ஆ' பிரிவுக்கும் நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் எதிர் வரும் 30 ஆம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-4)

சூடு காட்டிய பொருள் வெடித்து சிறுவன் காயம்

தென்மராட்சி, செப். 14

தென்னந் தோட்டமொன்றில் கண்டெடுத்த தகரப்பெட்டியை அடுப்பில் வைத்து சூடு காட்டிய போது அது வெடித்தது இதனால் 14வயதுச் சிறுவன் ஒருவன் காயம் அடைந்தான்.

இச் சம்பவம் பளை புலோப்பளை அரசன்நகர், இடம்பெயர்ந்தோர் குடியிருப்பில் இடம் பெற்றது

பெரும் சத்தத்துடன் வெடித்த மர்மப் பொருள் மிதிவெடியாக இருக்கலாமென நம்பப்படுகிறது

பளை அரசன் நகரைச் சேர்ந்த சந்திரன் றொபேட் (வயது 14) என்பவரே காயமடைந்த நிலையில் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். [இ-17]

வடக்குக்கு ஜெனரேற்றர்

வடபகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்கும் ஆரம்ப நடவடிக்கையாக ஐந்து கே. டபிள்யு சக்தி வாய்ந்த ஜெனரேற்றர்களை அனுப்பி வைக்க இலங்கை மின்சார சபை தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

(இ-எ)

மீட்டல்
வகுப்புக்கள்

PHYSICS
Mr மோகன்
B Sc.
CHEMISTRY
Mr. மகேஸ்வரன்
B.Sc (Hons)

ஆரம்பம்!
15-09-94
வியாழன் 4 P m
A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்கட்குரியது

SHAMROCK
யாழ், சுண்டுக்குளி
(32877)

NEW SCIENCE ACADEMY
எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

94 A/L
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்க்குரியது

சனி ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: 18-9-94 ஞாயிறு

Zoology	திரு. தர்மராஜா 8 00 — 9-00
Physics	திரு. கணேசன் 10 00 — 11-00
Chemistry	திரு மணியம் 11-00 — 12-00
Pu/App Maths	திரு. வெக்டர் 12-00 — 2-00
Botany	திரு. குணசீலன் 12-00 — 1-00
Pu/App Maths	திரு. குணசிங்கம் 4-00 — 6-00

[சி/9118]

கண்ணீர் அஞ்சலி

மழைக்காலம் விலகிப் போய்க் கொண்டே இருக்கிறது. நாங்கள் பார்க்கும் மேகங்கள் எல்லாம் நீர்ப் பிடிப்பின்றி வெண்மையாகவே இருக்கின்றன!

ஓ! எங்கள் கழகத்தின் மத்தியகுழு உறுப்பினரும். சிற்ப ஓவியத்துறைத் தலைவருமாகிய

கலாகேசரி ஆ. தம்பித்துரை

அவர்கள்

இறைவனடி சேர்ந்து விட்டாரா? காற்று ஓய்ந்ததா? கடல் மௌனமாயிற்றா? இறைவா? எம்மிடமிருந்து அவரைப் பிரித்து உன்னுடன் அணைத்துக் கொண்டாயா? நீ சுயநலக்காரன்!

— கலை இலக்கியத்தினர்
தெல்லிப்பழை

(7642)

மரண அறிவித்தல்கள்

திருமதி பட்டம்மாள் தில்லையம்பலம்

காலஞ்சென்ற இரத்தினம் தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிரவேலு, நாகேஸ்வரி, லோகநாதன் (ஆசிரியர், பகுதி நேரம் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்.), கிருஷ்ணவேணி பாக்கியலட்சுமி, இரட்ணகுமாரன் (பவன்) (ஜேர்மனி,) சிறீகாந்தன் (ரஞ்சன்) கண்மணி ஆகியோரின் அருமைத் தாயாரும், சத்தியவதி, கோபாலகிருஷ்ணன், செல்லாவதி. நடேஸ்வரன், லோகேஸ்வரன், சாந்திதேவி, பிரேமஜோதி, சுரேஷ் ஆகியோரின் மாமியாரும். சாந்தினி, ஜெயந்தினி, சாந்தகுமார், தயானி, கஜேந்திரன், மயூரன், பிரசன்னா, பிரசாத், பிரகாஷ், லோகதீசன், சாருஜன், ஜானகி, சஞ்சீவ், யாமினி, சர்மிளா, ராஷ்மிலா சாயிசுதா, கஸ்தூரி, நிசாந்தன், பிரதீபா, கிருஷ்ந்தினி அரவிந்தன், சுஜந்தன், அலெக்ஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனார்த்தனின் பூட்டியுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 14 09-1994 காலை 7 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் 10 00 மணிக்குப் பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. லோகநாதன்
(கஸ்ரப் இன்ஸ்ரிரியூட்)
75, சிவப்பிள்ளை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9173)

திருமதி தையல்நாயகி அருளானந்தம்

சதானந்தன் வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவிலைச் சேர்ந்த திருமதி அருளானந்தம் தையல்நாயகி 13-9-94 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அருமை மனைவியும் அருள்நாயகி, அருட்பிரகாசம் (லண்டன்), ஜீவநாயகி (கல்முனை), ஞானப்பிரகாசம் (லண்டன்), செல்வநாயகி, ஜெயப்பிரகாசம் ஆகியோரின் அருமைத் தாயாரும், சந்திரசேகரம், சகுந்தலா (லண்டன்), மதனகலா (லண்டன்), மகேசன் (கல்முனை) ஆகியோரின் மாமியாரும் கல்பனா (கனடா), கல்பறாஜ் (லண்டன்), பிரவீன்ராஜ், கேதீஸ்ராஜ், துவாரகா, புஷ்பந்தி, ஆரதி, அஜந்தன், அருள் (லண்டன்), சதன், கிரேஷ், கிரிதரகுமார் (கல்முனை), குனேந்திரன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், அர்ஜுனின் (கனடா) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-09-1994) காலை 10 30 மணிக்கு தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஜெயப்பிரகாசம்
(மகன்)
(32882)

Dr. கந்தவனம் வேலாயுதம்பிள்ளை

(Ayur Physician)

அல்வாயைப் பிறப்பிடமாகவும் பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. க. வேலாயுதம்பிள்ளை அவர்கள் 09-09-1994 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வளர்மதி (ஆசிரியை), பகீரதன் (U K), தயாபரன் (U K), ஜீவமதி, ரூபமதி (விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (13-09-1994) பொலிகண்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று ஊறணி மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வே. வளர்மதி
(மகள்)

நறுவிலியடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
[32884]

கொக்குவில் குமாரசுவாமிப் புலவர் குருசுவாமி

நினைவஞ்சலி மலர் (14-09-1994)

அஞ்சலிகள்

சைவமக்களின் அபிமானத்துக்கும் வணக்கத்துக்குமுரிய சிவத்திரு குமாரசாமிப் புலவர் அவர்கள் கொக்குவிற் பதியை மகிமைப்படுத்திய பெரியார். சைவ அனுட்டான சீலராக வாழ்ந்து புராண படனம் நிகழ்த்தி நாவலர் பெருமானின் நன்னெறியைப் பின்பற்றி ஒழுகியவர். இப்பெரியாரின் சற்புத்திரராகவும் சன்மார்க்க சீலராகவும் வாழ்ந்து இன்று அமரராகி விட்ட பெரியார் குருசுவாமி அவர்களை எமது இதயபூர்வமாக வணங்கி அஞ்சலி செலுத்துவது பெருங்கடனாகும்.

அமரர் குருசுவாமி தலைநகர் கொழும்பில் பல ஆண்டுகள் கடமை புரிந்தமையால் அங்கு வாழ் சைவமக்களுக்கும் திருக்கோயில்களுக்கும் இவருடைய தூயபணிகள் உயர்ந்த பயனை அளித்தன எனலாம்.

புராணங்களுக்கு உரைவிரிக்கும் திறமையும் பண்ணோடு திருமுறை ஓதும் சிறப்பும், சமயச் சொற்பொழிவாற்றும் ஆற்றலும் இடபெரியாரிடத்துப் பாராட்டக் கூடியதாக அமைந்திருந்தது அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி J p
தலைவர்
துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

பன்மொழியின் துறைபோகக் கற்றுத் தன்மொழியில் ஆழ்ந்த புலமைகொண்டு, அதன் ஏற்றம் கண்டு, அதன் பெருமையில் பெருமையுற்று தலைநிமிர்ந்து நின்றவர் அமரர் குமாரசுவாமிப்பிள்ளை குருசுவாமி அவர்கள்.

அவர் சைவத்தின் தொன்மை, மேன்மை அது வகுத்துத் தந்த வாழ்க்கை முறைகளை, வழிபாட்டு முறைகளை அறிந்தவர், அனுசரித்தவர். சைவம், தமிழ் கலைகளுக்கும் எந்தச் சபையிலும் அவருக்கு மேலான வரவேற்பும் மதிப்பும் இருந்தது. இவை இரண்டின் வளர்ச்சியிலும் ஈழத்தவர் பங்கு வேறெவர் பங்கினையும் விஞ்சியது என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்லும் அறிவும் ஆற்றலும் வாய்ந்தவர் அவர்.

சொற்பொழிவா, பேருரைகளா, வாதத்திறமையா, புராணபடனமா, ஆய்வு அரங்குகளா அவற்றிலெல்லாம் பொருளோ, கருத்தோ, சொல்லாட்சியோ பிறழாது மடைதிறந்தாற்போல் பெருக்கெடுத்தோடும் அவர் பேச்சு. அமரர் கொக்குவில் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் மகன் குருசுவாமியிடம் இவ்வியல்புகள் அமைந்திருந்தன என்பதில் வியப்பேதுமில்லை.

''செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றும் அச்
செந்நெல்லே ஆகி விளைதலால் - அந்நெல்
வயல் நிறையக் காய்க்கும் வளவயல் ஊர!
மகன் அறிவு தந்தை அறிவு'' (867)

என்னும் நாலடியார் பாடல் உன்னுதற்குரியது; ''இவன் தந்தை என்நோற்றான் கொல்'' என்றே வியந்து அமைவோம்.

கலாநிதி க. கனகராசா,
மில்க்வைற் அதிபர்.

சைவம் தழைத்து தமிழ்ஓங்க வாழ்ந்த

பல்கலைக் குரிசில் குருசுவாமி

வித்துவான் வ, கந்தையா

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனவும், ''அன்பும் சிவமும் ஒன்றே'' எனவும் அருளிய திருமூல தேவரின் திருமந்திரத்தை உளத்தே கொண்டு ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என வாங்கு தன் வாழ்நாள் முழுவதும் சைவமும், தமிழும் உலகெலாம் பரவ அயராது உழைத்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வநிலை கண்டு உயர் வாழ்வின் உண்மை நிலையை உலகோர் உணர வைத்து, குருசுவாமி என்ற 'பல்கலைக் குரிசில்' அமரரானார்.

ஆறுமுக நாவலர் பெருந்தகை காட்டிய பெருவழியில் வந்த செந்திநாதஐயர், கணேசஐயர் போன்றவர்களைத் தொடர்ந்து வந்த குமாரசுவாமிப் புலவரின் சைவப் பணியும், தமிழ்ப் பணியும் நாடறிந்தனவாகும். இவற்றுக்குச் சிகரம் வைத்தாற்போல் அவர் கொக்குவில் மேற்கில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையை 1922 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 18ஆம் நாள் ஆரம்பித்து மக்கள் பேரறிவு பெறவைத்தார். இவரைத் தந்தையாராகவும், சைவம் செழிக்கத் தமிழ் ஓங்க வைத்த சிவப்பணி குடியிலே தோன்றிய திருநெல்வேலிச் செல்லப்பாச் சுவாமி அவர்களின் அரும் புதல்வி சிவபாக்கியம் அவர்களைத் தாயாராகவும் கொண்டு 1935ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 22ஆம் நாள் குருசுவாமி அவர்கள் ஏகபுதல்வனாகத் தோன்றினார்.

கல்விச் சிறப்புகள்

''விளையும் பயிரை முளையிலே தெரியும்'' என்பதற்கமைய பெற்றோரால் சைவமும் தமிழும் ஊட்டப் பெற்ற குருசுவாமி அவர்கள் ஆரம்பக் கல்வியை ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் கற்றார்; சைவச் சூழலில் அமையப் பெற்ற பரமேஸ்வராக் கல்லூரியில் தனது ஆங்கிலக் கல்வியைக் கற்றார். இளம் பராயத்திலேயே துடிப்பும், ஆற்றலும், விவேகமும் உள்ளவராக விளங்கினார். தந்தையார் அரவணைப்பில் வளர்ந்த இவர் சமஸ்கிருதம் கற்று அதில் பாண்டித்தியமும் பெற்றார். சங்கீத ஞானம் கைவரப்பெற்று திருமுறை ஓதல், மிருதங்கம், கடம் என்பன வாசித்தல் என்பவற்றில் வல்லவரானார். கல்லூரியில் சாரணர் இயக்கத்தில் சேர்ந்து (Rover Scout) தலைவராகவும் பணியாற்றினார். தந்தையாரின் புராண படனம், கதாப்பிரசங்கம், உபந்நியாசம் என்பவற்றிலும் ஈடுபாடு உடையவர். புராண நாடகங்களில் முதன்மை நடிகராகவும் திகழ்ந்தார். மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் திருப்பணிகள், விழாக்கள், இந்து வாலிப அமைப்புக்கள் என்பவற்றில் ஈடுபாடு உடையவர். திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிகளிலும் ஈடுபாடு உடையவராக வருடாவருடம் விழாக்களில் பங்குபற்றினார்.

வகித்த பதவிகள்

இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவர் பிரிவில் தமிழ், சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளைப் பாடங்களாகக் கற்று 1960 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியாகினார்.

இவரது ஆற்றலையும் விவேகத்தையும், பண்பாட்டையும் அறிந்த யாழ்ப்பாணக் கல்லூரியின் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய எஸ். கே. பங்கர் அவர்களால் பட்டதாரி மாணவர்களுக்கு சமஸ்கிருதம், பாளி முதலிய மொழிகள் கற்பிப்பதற்குரிய விரிவுரையாளராக அதே ஆண்டில் நியமிக்கப்பட்டார். பின்பு சுன்னாகம் இராமநாதன் கல்லூரிப் பணிப்பாளர் அமரர் சு. நடேசபிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அக் கல்லூரியின் மேனிலை மாணவர்களுக்குக் கல்வி புகட்டினார். பின் கொழும்பு ஆயுள்வேதக் கல்லூரியில் சமஸ்கிருத விரிவுரையாளராகப் பணியாற்றினார். அடுத்து அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகச் சேர்ந்து பின் ஆராய்ச்சியாளராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

திருமண வாழ்வு

அமரர் குருசுவாமி 1967 ஆம் ஆண்டில் அராலி வடக்கு செட்டியார் மடத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரும், உதவி அதிபருமான திரு. மு. ஆறுமுகம் மங்கையர்க்கரசி தம்பதியினரது மூத்த புதல்வி திலகநாயகியைத் திருமணம் செய்தார்.

அவர் சுரேந்திரன் (வர்த்தக

[5ஆம் பக்கம் பார்க்க)

அஞ்சலி

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!

அமரர் திரு. கு. குருசுவாமி அவர்களின் மறைவு சைவ உலகுக்கே ஓர் பேரிழப்பாகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்த சைவப் பெரியார், சைவப்பழம் நிறைவான இறைபக்தி உடையவர். தந்தையாரின் திவ்ய சைவ ஆசார வழி பிறழாது நின்று சேவையாற்றியவர் அரசாங்க உத்தியோகம் வகித்தும் சைவமும் நற்றமிழும் மேலோங்கி வளரவேண்டுமென தளராது உழைத்தவர். நல்ல பேச்சாளர், சிறந்த எழுத்தாளர் மக்களின் மனங்களை ஈர்க்கும் சைவ சமய உபந்நியாசங்கள் பல செய்து புகழும், [illegible] பெற்றவர். அவரின் ஆடம்பரமில்லா வாழ்க்கையும் மென்மையான பேச்சும் எவரையும் மிக அன்போடு உபசரிக்கும் உயர்பண்பும் எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்தன. இவர் போன்றோர் ஆயிரத்தில் ஒருவரே.

அன்னாரின் ஜீவாத்மா எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதார விந்தங்களைச் சார்ந்து நிரதிசய நித்தியானந்த சாந்தி நிலை எய்த வேண்டுமென நாம் எல்லோரும் உளமாரப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்.

தமிழர்களின் சுதந்திரம், இறைமையை நிலைநாட்டும் எந்தத் தீர்வுக்கும் தயார்

வள்ளுவர் விழாவில் இளம்பரிதி

யாழ்ப்பாணம், செப். 14

எமது தலைவரின் அரசியல் நாகரிகம் நற்பண்புகள் காரணமாகவே ஸ்ரீலங்கா அரசு அரசியல் தீர்வினை விரும்பும்போது நாமும் அந்த அடிப்படையில் செயற்படுகின்றோம். எமது சுதந்திரத்தையும் இறைமையையும் நிலைநாட்டக் கூடியதாக எமது மக்களின் பிரச்சினைகள் எந்த வடிவத்தில் தீர்க்கப்படுமாயினும் அதற்கு நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தமிழீழத் திருவள்ளுவர் மன்றத்தின் வள்ளுவர் விழா முதல்நாள் நிகழ்ச்சியில் பேசிய யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி கூறினார்.

வள்ளுவர்விழா உடும்பிராய் சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட அரங்கில் கடந்த 9ஆம் திகதி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவின் முதல்நாள் நிகழ்ச்சியில் திரு. இளம்பரிதி தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

இராணுவத் தீர்வென்ற நிலைப்பாட்டில் ஐ.தே. கட்சியும் அரசியல் தீர்வென்ற நிலையில் பொதுமக்கள் முன்னணியும் தேர்தலில் களத்துக் கொண்டன. பொதுமுன்னணி அரசமைத்ததும் அந்த அரசின் நல்லெண்ணச் சமிக்ஞைகள் காரணமாக நல்ல அடிப்படையில் கைதிகளை விடுத்தோம். நிபந்தனையற்ற பேச்சுக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் தயார் என்று தெரிவித்துள்ளோம்.

பேச்சுக்கள் எங்கே எப்படி நடக்கும் என்பதில் மக்கள் அக்கறை செலுத்துகின்றனர். கொழும்பில் சந்திரிகா, விஜயதுங்கா என இரண்டு அரசாங்கங்கள் நடக்கின்றன. தமிழீழத்தில் ஒரு அரசாங்கம் மட்டுமே உள்ளது. எனவே இங்கு அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். அதனால் பேச்சுவார்த்தைக்கு இங்கு வாருங்கள் எனக் கோருகின்றோம்.

தமிழீழப் போராட்டத்தைக் கைவிட்டு மாற்றுப் பிரச்சினைகளை எப்படி எடுப்பீர்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள். மாற்றுத் திட்டம் ஒன்று வைத்தால் அது குறித்துப் பரிசீலிக்கப்படும். எமது பிரச்சினைகள் குறித்து எமது அணுகுமுறை மதிநுட்பமும் ராஜதந்திரரீதியிலும் அமைந்ததாகவே இருக்கும். யாரையும் அடக்காமல் யாருக்கும் அடிபணியாமல் சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் எமது மக்கள் வாழவேண்டும் என்பதே எங்கள் தலைவரின் நிலைப்பாடு.

இருள் சூழ்ந்த மனித வாழ்வில் ஒளி காட்ட வந்த திருக்குறள் அது எமது விடுதலைப் போராட்டத்துடன் இணைந்த கருத்துக்களை வழங்குகின்றது.

சினிமா தவிர்க்கப்பட்டது குறித்த விமர்சனங்கள் பேசப்படுகின்றன. கசடறக் கற்கும் அடிப்படையில் மனத்தின்கண் மாசிலனாக வாழ ஆரோக்கியமான சமுதாயம் உருவாகவே இந்தத் தவிர்ப்பு.

திருக்குறள் புலவர்களுடனும் அறிஞர்களுடனும் நில்லாது சாதாரண மக்கள் வரை செல்லக் கூடியதாக நூல்கள் பல உருவாக வேண்டும். இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் இவ்விழாவில் பேசும்போது கூறியதாவது:

எந்த நாட்டவரானாலும், எந்த மதத்தவரானாலும் வள்ளுவர் எமது மதத்தவர் என்று கூறக் கூடியதாக எக்காலத்துக்கும் உரிய சிந்தனைகள் திருக்குறளில் தொகுக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், பண்டிதர் நா. இராசையா ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

முன்னதாக அன்னை பூபதி கலையரங்கில் இருந்த திருவள்ளுவர் படம் திருக்குறள் சுவடி என்பன ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன.

தேசியக் கொடியை கோப்பாய் வட்டப் பொறுப்பாளர் திரு. வி. சோழனும் மன்றக் கொடியை தலைவர் திரு. விமலநாதனும் ஏற்றினார்கள். திரு. முதலித்தம்பி நாகபத்மநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

கோண்டாவில் கா. கிருஷ்ணதாசன் குழுவினரின் மங்கள இசையும், பிரம்மஸ்ரீ க. இராமநாதனின் திருக்குறள் இன்னிசையும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-111)

விவசாய தின விழாக்கள் ரத்து

கொழும்பு, செப். 14

விவசாய தினவிழாக்கள் மற்றும் அவை தொடர்பான தமாஷாக்களை உடனடியாக ரத்துச்செய்வதாக விவசாயம், காணி மற்றும் வனவளத்துறை அமைச்சர் டி. எம் ஜயரத்ன தெரிவித்தார்.

ஐ. தே. க. அரசின் காலத்தில் விவசாயிகளைக் கௌரவிக்கும் விழாக்கள் நாடு முழுவதும் விவசாய அமைச்சினால் நடத்தப்பட்டு வந்தன. பிரதான நிகழ்ச்சி தெற்தரமாயாவில் இடம்பெற்று வந்தது.

விழாக்கள் கொண்டாடி விவசாயிகளை புதிய அரசு கௌரவிக்காது. இதற்குப்பதில், இன்னலுக்குள்ளாகியுள்ள விவசாயிகளினால் மீளச்செலுத்த வேண்டிய விவசாயக்கடன்களை ரத்துச்செய்தும், 50 சதவீதமான விலைக்கழிவில் உரம் வழங்கியும் விவசாயிகளுக்கு உதவ புதிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது''—

இவ்வாறு அமைச்சர் டி. எம். ஜயரத்ன தெரிவித்தார். (இ-எ)

ஒஸி, தொண்டமானால் ஜனாதிபதித் தேர்தலில் காமினிக்கு பாதக நிலை!

கொழும்பு, செப். 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிக்க முன்வந்திருப்பதும்—

ஐ. தே. கவின் எம். பியாக இருக்கும் ஒஸி அபேகுணசேகர ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராகப் போட்டியிடவிருப்பதும்—

ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடும் காமினி திஸநாயக்காவுக்கு கிடைக்கும் வாக்குகளைக் கணிசமான அளவு குறைக்கும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் ஜனாதிபதித் தேர்தலின்போ [illegible] திஸநாயக்கா பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-6)

தெற்கின் புதிய முதலமைச்சர்

தென் மாகாணசபையின் புதிய முதலமைச்சராக திரு. மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவு செய்யப்பட்டார்.

இம்மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த அமரசிறி தொடங்கொட, கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு எம்.பியாகத் தெரிவு [illegible] ஏற்பட்ட வெற்றிடத்துக்கே [illegible] கப்படவிருக்கிறார். (உ-4)

புலிகளின் குரல் வானொலியில்

14 – 09 – 1994
புதன் இரவு
★ 8-01 — குயிலோசை — ''மானத் தமிழ் மறவன்'' சங்கிலியன் கதையின் தொடர்ச்சி
★ 8-20 — ஏர்முனை — ''வாழைத்தோட்டத்தில் தம்பிப்பிள்ளையர்'' தனிநடிப்பு
★ 8-30 செய்திகள்
★ 8-40 — நாடகம் — ''எல்லாளன்''

15 – 09 – 1994
வியாழன் காலை
★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30—செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தியாக தீபம் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''திலீபனின் தியாகம்.''

பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி நியமனம்

கொழும்பு, செப். 14

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான புதிய இராஜதந்திரப் பிரதிநிதியாக மேன்மை தங்கிய ஒஸ்வல்டோ படில்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த இவர் 1966இல் குருப்பட்டம் தரித்தார். 1973 இல் வத்திக்கான் ராஜதந்திர சேவையில் சேர்ந்து கொண்ட இவர் 1973—75 காலப் பகுதியில் இலங்கைக்கான வத்திக்கான் இராஜதந்திரக் குழுவில் இடம்பெற்றிருந்தார். (ஐ-எ)

தீருவிலில் சிரமதானம்

வல்வெட்டித்துறை, செப். 14

வல்வை திருவில் பன்னிருவர் புனித தூபி, வல்வை விளையாட்டுக்கழகங்களினால் சுழற்சி முறையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. திருவில் [illegible] அழகுமாக்கப்பட்டு வருகின்றது. (இ-155)

துப்பாக்கிகளை கைப்பற்றத் தவறினால் பொலீஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு, செப். 14

தமது பகுதியில் அனுமதி பெறாதவர்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகளை கைப்பற்றத் தவறும் பொலீஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இந்த உத்தரவு கடந்த 8 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்திருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிகாரமளிக்கப் படாதவர்களிடம் உள்ள ஆயுதங்களை கைப்பற்றுவதில் பொலீஸார் அக்கறை காட்டாததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பதாக அரசியல்வாதிகளிடம் உள்ள சட்டவிரோத ஆயுதங்கள் அனைத்தையும் மீளப்பெறும்படி பிரதமர் சந்திரிகா பொலீஸ்மா அதிபர் பிராங் டி சில்வாவுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

தனிப்பட்ட முறையில் பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

தற்காலிக அதிபர்களுக்கு நிரந்தர நியமனங்கள்

வலிகாமம் தெற்கு, செப். 14

அதிபர்கள் தரங்களில் தற்காலிகமாக பாடசாலைகளில் கடமையாற்றி வரும் அதிபர்களின் பதவிகள் நிரந்தரமாக்கப்படவுள்ளன:

தற்காலிக அதிபர்களாக 1993 ஆம் ஆண்டில் இருந்து கடமையாற்றிவரும் அதிபர்களுக்கு அவர்களது தரத்தை நிரந்தரப்படுத்தி நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு தற்காலிக அதிபர் சேவை புரியும் அதிபர்களின் விவரங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பொருத்தமான அதிபர்களுக்குரிய விண்ணப்ப படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதிபர்கள் அவற்றைப் பூரணப்படுத்தி கோட்ட அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-153)

கமக்காரர் அறிமுக அட்டை விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 14

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கமக்காரர் அறிமுக அட்டைக்கூடாக இவ்வாண்டு கால போக பயிர்ச்செய்கைக்கான அனைத்து உள்ளீட்டுப் பொருள்களும் விநியோகிப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால்,

செய்கையாளரின் விண்ணப்பத்திற்கமைவாக கமக்காரர் அறிமுக அட்டைகள் தயாரிக்கப்பட்டு இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள், அட்டைக்கு விண்ணப்பித்து புகைப்படம் கொடுத்து அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இதுவரை காலமும் கமக்காரர் அறிமுக அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள் உடன் அவ்வப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினருடன் தொடர்புகொண்டு இம்மாதம் இறுதிப் பகுதிக்கு முன்னர் கமக்காரர் அறிமுக அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்.

அட்டைகள் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் இருப்பின் அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளருடனோ அல்லது வட்டஇணைப்பாளருடனோ தொடர்புகொள்ளும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செய்திக்குறிப்பொன்றின் மூலம் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஆறரை அடி உயரம், மூன்று அடி அகலம் கொண்ட இரும்புச் சுருக்குக் கேற்றும் சிறிய கட்டிலுக்குரிய ஆர் பிகோ குஷன் மெத்தையும் விற்பனைக்குண்டு. கி. நாதன் இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம். (32868)

வீடு விற்பனைக்கு

கொக்குவில் பூநாறி மரத்தடி சபாபதி வீதியில் தலையாளி வைரவர் கோயிலுக்கு முன்னதாக உள்ள ஒழுங்கையில் ஒன்றரை பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவும்: கவிதா இந்திரகுமார், தலையாளி ஒழுங்கை, கொக்குவில். (32870)

காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட இரண்டு பரப்புக் காணியும், வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி. வசிதாதேவி, ஜெயராஜ் வீதி, பொற்பதி றோட், கொக்குவில். (32830)

புறொயிலர் குஞ்சு

Prima Broiler (பிறிமா புறொயிலர்) ஐந்து நாள் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32872)

இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி கிலோ 140/- மொத்த வியாபாரிகளுக்கும்ஹோட்டல்களுக்கும் கிலோவுக்கு ரூபா 10/- கழிவு உண்டு. காலை 7 மணிக்கும் 9 மணிக்கும் தொடர்பு கொள்ளவும்: இல. 21, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். I. C. R. C க்கு அருகில். (32860)

தவறிவிட்டது

10-9-94 அன்று கடற்கரைக்கும் கிளாலி பஸ் நிலையத்திற்கும் இடையில் எனது கைப்பை தவறிவிட்டது. அதற்குள் முக்கியமான ஆவணங்கள் இருப்பதனால் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணப்படும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 234 A, இலங்கையன் பதிப்பகம், K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (32858)

மணிக்கூடுகள் திருத்தல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-9048)

ஆனந்தம் சீயாக்காய்

சிரசின் தனித்துவத்தை பேணுவதற்கு வேண்டிய மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து சித்தமருத்துவ நிபுணர் ஆலோசனைப்படி தயாரிக்கப் பெற்றது. ஆனந்தம் சீயாக்காய் பவுடர். பேன், சொடுகு, அழுக்கு முற்றாக அகற்றி சுகவாழ்வு தருகிறது. கேட்டு வாங்குங்கள் ஆனந்தம் சீயாக்காய் பவுடர். (சி-9035)

புறொயிலர்கள

முன்கூட்டியே பதிவு செய்யுங்கள். தரத்தில் உயர்ந்த, நல்லின பிறிமா புறொயிலர்களை பெற்றுக் கொள்வதற்கு முன்கூட்டியே பதிவு செய்யுங்கள். தொடர்பு: மேஜர் பிரதாப், செட்டி பண்ணை இராஜ வீதி, கோப்பாய், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். (சி-9110)

வணிகமும் நிதியும்-I

பங்குச் சந்தையும் நடைமுறை விடயமும், வணிகமும் நிதியும் - II நடைமுறை விடயம் உட்பட 40 தலைப்புக்களின் குறிப்புகளும் விளக்கங்களும் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-9155)

உ

நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலயத்தின் முன்னாள் பரிபாலகர்

பிரம்மஸ்ரீ பொ. குருசாமிக் குருக்கள்

(சபாபதிக் குருக்கள்)

அவர்களின்

19ஆம் ஆண்டு நினைவு தினம்



இன்று காலை அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெறும் நண்பகல் 12-00 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும். அத்தோடு கைதடி சைவ அநாதைப் பிள்ளைகளுக்கு மதிய உணவும் வழங்கப்படும்.

- அன்னாரின் புத்திரன்.

[32843]

7ஆம் ஆண்டின் நினைவில்



பிறப்பு: 12 — 05 — 1937

இறப்பு: 14 — 09 — 1987

அமரர் மனவல் றொபேட்ஸ்

(றுபட்)

அன்புக்கோர் உறைவிடமாய்
அகலாமல் அரவணைத்து
தென்போடு தெளிந்தகலைச்
சிந்தையனாய் எமைக்காத்து
எல்லோர்க்கும் இனித்தவனாய்
எந்தையே வாழ்ந்தாயே!
சொல்வேசப் பொருள்கடந்த
தூயவனிற் கலந்தாயே!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

57, பாலுடையார் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

[32869]

நீங்காத நினைவில் முதலாமாண்டு

தோற்றம்: 12 — 10 — 1926

மறைவு: 26 — 08 — 1993

அமரர் முருகேசு கணேசலிங்கம்

(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்)

திதி: 14 – 09 – 1994

ஐயா! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்போடும், பாசத்தோடும் நல்வழிகாட்டி எம்மை வாழவைத்த எங்கள் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

ஜெயந்தி வாசா,
இமையாணன்,
உடுப்பிட்டி.

[illegible]

புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 14

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டு நிகழ்வாக ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக்கண்காட்சி ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் பருத்தித்துறை வடஇந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தும் இக்கண்காட்சியை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் திறந்துவைப்பார். (ஈ)

தமிழ்ச்சேவை பணிப்பாளராக மதியழகன்

கொழும்பு, செப். 14

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக திரு. நாகநாதன் மதியழகன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஈ)

விக்னா

கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

94 இல்

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

கணக்கியல்
பொருளியல்]
புள்ளி வழங்கல் திட்டம் பற்றிய விளகக வகுப்புக்கள்

16-09-1994

வெள்ளி காலை 8மணி

★ வெள்ளி முதல் மீட்டல் வகுப்பிற்கான பாடங்கள் முதலாம் அலகிலிருந்து ஆரம்பமாகும். இம்மாதக் கட்டணங்கள் அறவிடப்படமாட்டா.

[சி-9170]

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

முக்கிய அறிவித்தல்

மாவட்ட பொதுச் சபையின் தீர்மானப்படி தியாகி திலீபன் நினைவு நாள் விழாவிற்கான நிதியை சகல பொதுச் சபை உறுப்பினர்களும் 16-09-1994க்கு முன் செம்மணி வீதி, நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்தில் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
யாழ். கோட்டம்,

[சி-9112]

ஓராண்டு நினைவஞ்சலி

ஒளியும் துலங்கிட: 29 — 04 — 1929

விழியும் கலங்கிட: 26 — 08 — 1993

அமரர்

சிவசுப்பிரமணியம் மீனாட்சிசுந்தரம்

[ஓய்வு பெற்ற தபால் ஊழியர்]

திதி: 14-09-1994

கள்ளம் இல்லா வெள்ளை மனத்தோன்
அள்ளக் குறையா அறிவுக்கடலோன்
வள்ளல் குணமேலோன் வாழ்-விலக்கணம் வகுத்தோன்
மெள்ளக் கனன்று-மெய்யுணர்வுகளும் குமுறிட
மேதினிதனை ஒறுத்தனன்-அழகு மீனாட்சி சுந்தரன்

இன்று [14-09-94] புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் குடும்பத்தலைவனின் ஆண்டு நினைவு வைபவங்களில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மா சாந்திபெறப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன்

[illegible]

[சி-9113]

பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்
நவரட்ணராஜா
இந்திரநாத்

யாழ். இந்து மைந்தன் செல்வன் ந. இந்திரநாத் தனது பிறந்த தினத்தை 14-09-94 இன்று 91/1A, அரசடி வீதியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

– நண்பர்கள்.

(32855)

A/L 95, 96

பிரத்தியேக வகுப்பு

இரசாயனம்,
பௌதீகம்

ஆகிய இரு பாடங்களும் பிரத்தியேகமாக கற்பிக்கப்படும்.

தொடர்பு:

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

[சி-9116]

எட்டு ஆண்டுகளாக..

கந்தையா நல்லம்மா

உங்களை நினைவு கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொற்பதி றோட்,
கொக்குவில்.

(சி-9172)

பிறந்த தின வாழ்த்து

செல்வன் இளங்கீரன்

14-09-1994

புலோப்பளை பளையைச் சேர்ந்த திரு. திருமதி இராஜகுலம் - விஜயகுமாரி தம்பதிகளின் தவப்புதல்வன் செல்வன் இளங்கீரன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மையா, அம்மம்மா பூட்டி, அப்பப்பா, அப்பம்மா, சின்னம்மையா, சின்னம்மம்மா, மாமாமார், அத்தைமார், அன்ராமார், சித்தப்பாமார் மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

[32825]

மதிப்பீடு

மலர் வெளியீடு

ஆசிரியர் கைநூல்

காலம்: 17 — 09 — 1994 சனி
முற்பகல் 8-30 மணி

இடம்: தொலைக் கல்வி நிலையம்,
யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்

ஆசியுரை:
- சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
- திரு. ஆறு திருமுருகன்

வெளியீட்டுரை:
திரு. கி. சரவணபவன் (S. L. E. A. S.) — [illegible]

மதிப்பீட்டுரை:
திருமதி கோகிலா மகேந்திரன் - அதிபர்

வாழ்த்துரை:
- திரு. க. கந்தசாமி (கல்விப் பணிப்பாளர்-யாழ். வலயம்-2)
- திரு. சு. இரத்தினராசா (பி. க. ப. - உடுவில்)
- திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

வினாத்தாள் மதிப்பீட்டுத் திட்டமிடல் முதல் விடைத்தாள் பகுப்பாய்வு நடவடிக்கைகள் வரை சகல கருமத் தொடர் விளக்கங்களும் மாதிரிப் படிவங்களும் அடங்கிய சகல ஆசிரியர்களுக்கும் வேண்டிய சிறந்த கைநூல். விலை ரூபா 30/- மட்டுமே.

ஆசிரியத்துறைசார் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— வெளியீட்டுக் குழு.

[7638]

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 — 08 — 1924

மறைவு: 06 — 09 — 1992

திருமதி தவமணி சிவகுருநாதன்

ஆண்டு இரண்டு ஆனாலும், உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும். அருவமாய் இருந்தும் எம்மை வழிநடத்திச் செல்லும் எங்கள் அன்புத் தாயே! உங்களின் ஆத்ம சாந்திக்காக இத்தி விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(32865)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கடிதமும் பதிலும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் முகமாக, ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்துவதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் நான்கு பிரதிநிதிகளை தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் நியமித்துள்ளார். இது பற்றிய தகவலை, பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதிய பதில் கடிதத்தில் அவர் தெரிவித்திருக்கிறார்.

தலைவர் பிரபாகரன் எழுதிய பதில் கடிதம், இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதில் அவருக்குள்ள பெருவிருப்பத்தையும், அக்கறையையும், உறுதியையும் காட்டுகிறது. அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்குவதற்கு அரசாங்கத்துக்கு நேசக்கரம் நீட்டுவதற்கு தாம் தயாராக இருப்பதையும் அவர் வெளிப்படுத்திவிட்டார்.

வடக்கில் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் சீரமைப்புப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கவும், மக்களின் அன்றாட வாழ்க்கை நிலையை மேம்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிக்கவும் தாம் தயங்கப் போவதில்லை என்பதையும் தலைவர் மிகத் தெளிவாகத் தமது கடிதத்தில் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

பிரதமர் சந்திரிகா பதவியேற்ற பின்னர், தலைவர் பிரபாகரன் எழுதிய இந்த முதலாவது கடிதம் இனப்பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்தை உருவாக்குவதில் அவரது நிலைப்பாட்டை மிகத் தெட்டத் தெளிவாக்கி விட்டது.

ஆகையால் பிரதமர் சந்திரிகா இனி எதற்கும், எவருக்கும் காத்திருக்க வேண்டியதில்லை. நாட்டைச் சீரழிக்கும் இந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமக்கு எவ்வளவு விருப்பமும் அக்கறையும் உண்டோ, அதே அளவு விருப்பமும் அக்கறையும் தலைவர் பிரபாகரனுக்கும் உண்டு என்பதனை உணர்ந்து செயலில் இறங்க வேண்டியது தான்.

ஐந்து தசாப்தங்களாக தீர்க்கப்படாமல் இழுபட்டு, மென்மேலும் மோசமடைந்து வரும் இனப்பிரச்சினையை ஒரு மாதம், இரண்டு மாதங்களில் தீர்த்துவிட முடியாது. மந்திரத்தால் மாங்காய் விழுத்த இயலாது. தீர்வு என்ற இலக்கை அடைவதற்குப் படிப்படியாகவே முன்னேற வேண்டும்.

ஆனால் அந்தப் படிமுறை முன்னேற்றத்துக்கான போக்கு, தலைவர் பிரபாகரனுக்கு சந்திரிகா எழுதிய முதலாவது கடிதத்தில் தொனிக்கவில்லை.

பொருளாதாரத் தடை முற்றாக இன்னும் நீக்கப்படவில்லை. 28 பொருள்களுக்கு மட்டுமே தளர்த்தப்பட்டுள்ளது. ஆனால், பிரதமரின் கடிதம் தடை நீக்கப்பட்டு விட்டதாகத் தவறான கருத்தைக் கொடுக்கிறது. அது ஒரு புறமிருக்க —

பொருள்களைக் கொண்டு வருவதற்குப் போக்குவரத்துத் தடை நீக்கப்பட்டாக வேண்டும்.

ஆனால் பிரதமர் சந்திரிகா தமது கடிதத்தில் போக்குவரத்துத் தடை நீக்கத்தை வசதியாக மறந்து விட்டார்.

அதேபோல அடிப்படையான விடயம் ஒன்று குறித்தும் சந்திரிகாவின் கடிதத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை!

சமாதானம், இயல்புநிலை, பொருளாதாரத் தடைத் தளர்வின் பயன், போக்குவரத்துத் தடை நீக்கத்தின் விளைவு என்று எல்லாமே கைகூடுவதற்கு அத்தியாவசியமாகவும், அவசரமாகவும், அடிப்படையாகவும் தேவைப்படுவது யுத்த நிறுத்தம். அது குறித்து சந்திரிகா தமது கடிதத்தில் ஒரு சொல்தானும் மூச்சுவிடாமல் இருப்பது ஏமாற்றத்தைத் தருவதாக உள்ளது.

இது படையினரோடு சம்பந்தப்பட்டது. ஆகையால் நேற்று இப்பத்தியில் நாம் எழுப்பிய கேள்வி மேலும் உறுதியாகிறது. இந்த முட்டுக்கட்டையை உடைத்தெறியும் துணிவு சந்திரிகாவுக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது. அப்போது தான் அவர் விரும்பும் இலக்கை இயன்றளவு விரைவில் அடையமுடியும்.

லயனல் அடுத்த சில தினங்களில்
யாழ்ப்பாணம் வருவதற்கு திட்டம்

கொழும்பு: செப். 14

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தேவையான ஒழுங்குமுறைகளை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள திரு. லயனல் பெர்னாண்டோ—

'சண்டேரைம்ஸ்' தகவல்

அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணத்துக்குச் செல்லத் திட்டமிட்டிருப்பதாக சண்டேரைமஸ் தகவல் வெளியிட்டது.

யாழ்ப்பாணத்துக்கு பிரதமர் சந்திரிகா விஜயம் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதும் அவரது விஜயத்தின் நோக்கமாகும் என்றும்—

பிரதமர் சந்திரிகா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் தினத்தன்று, தமது பாதுகாப்பில் உள்ள எல்லா போர்க் கைதிகளையும் நல்லெண்ண நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் விடுதலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் சண்டேரைம்ஸ் வாரஇதழின் அரசியல் செய்தியாளர் தமது கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளார். [இ-எ]

இனப்பிரச்சினையை
கையாள துணிச்சல்

சந்திரிகா குறித்து 'லீமொண்டே'

கொழும்பு, செப். 14

இனப்பிரச்சினையைக் கையாளக் கூடிய துணிச்சல் மிக்கவர் பிரதமர் சந்திரிகா.

பிரான்ஸின் பிரபல பிரெஞ்சு மொழி பத்திரிகை லீமொண்டே தனது ஆசிரியர் தலையங்கத்தில் முன் கண்டவாறு தெரிவித்துள்ளது.

பாரிஸ் சொபோன் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற்று வந்த சமயம் திருமதி சந்திரிகா லீமொண்டே நாளிதழில் கனிஷ்ட பத்திரிகையாளராகப் பணியாற்றி வந்தார்.

மிகவும் துணிச்சலாகவும் புரிந்துணர்வுடனும் பிரதமர் சந்திரிகாவின் தலைமைத்துவம் இனப்பிரச்சினையை கையாள முடியும் என்றும் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

யாழ். குடாநாட்டுக்கு
தொலைத்தொடர்பு வசதி

அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, செப். 14

யாழ். குடாநாட்டுக்கு மீண்டும் தொலைத்தொடர்பு வசதிகளையும் சீரான தபால் விநியோகத்தையும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவதாகவும் —

இதற்காகத் தாம் யாழ்ப்பாணம் செல்ல எண்ணியிருப்பதாகவும் தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்புப் படையினரின் சிபார்சுக்கு இணங்க புதிய தொலைபேசி இணைப்பு வழங்கும் நடைமுறை தற்போது கிழக்கு மாகாணத்தில் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

இது பல முறைகேடுகளுக்குக் காரணமாக உள்ளது.

இந்த நிபந்தனையை தாம் அகற்ற தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். [இ-எ]

நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, செப். 14

வளர்ப்பு நாய்களுக்கு விசர் தடுப்பூசி நாளை 15 ஆம் திகதி சரசாலை [illegible] சனசமூக நிலையத்திலும் அறிவொளி சனசமூக நிலையத்திலும் போடப்படும். (ச-117)

சந்திரிகா ஜனாதிபதியானால்
ஸ்ரீமாவோ பிரதமராக வாய்ப்பு

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளராக சந்திரிகா போட்டியிட்டு வெற்றியீட்டும் பட்சத்தில், பிரதமராக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமராக வரும் முயற்சியில் அமைச்சர்கள் அனுருத்த ரத்வத்த, டி. எம். ஜயரத்ன, ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

எனினும் பொ. ஐ. மு. எம். பிக்களில் பெரும்பாலோர் திருமதி ஸ்ரீமாவோ பிரதமராவதையே விரும்புகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

பொ. ஐ. முன்னணியில் சேர்ந்தாலே
தொண்டமான் அமைச்சராகலாம்

கொழும்பு, செப். 14

திரு. தொண்டமான் ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பி. பதவியில் இருந்து விலகி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம். பியாக நியமிக்கப்பட்ட பின்னரே அமைச்சராக நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் சந்திரிகாவுக்கும் தொண்டமானுக்கும் இடையே நடந்த சந்திப்பை அடுத்தே இந்த நிலைவரம் உருவாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம். பியாக இருக்கும் வேளை தொண்டமான் பொ. ஐ. மு. அரசில் அங்கம் வகிக்க முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியில் தெரிவான இ. தொ. கா. எம். பிக்களுக்கும் ஐ. தே. க. தேசியப் பட்டியலில் இடம் பெற்றுள்ள இ. தொ. கா. எம். பிக்களுக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியல் எம். பி பதவியை ராஜினாமாச் செய்யும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

யாழ். தேர்தலை ஆட்சேபித்து
முஸ்லிம் காங்கிரஸ் வழக்கு

கொழும்பு, செப். 14

யாழ். மாவட்டத்தில் நடந்த தேர்தலை நிராகரிக்கக்கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தேர்தல் ஆட்சேப மனுவை தாக்கல் செய்துள்ளது.

கடந்த தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட கொழும்பு கொம்பெனித் தெருவைச் சேர்ந்த மொஹிதீன் அப்துல் காதர் இக்பால் என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ். மாவட்ட பெரும்பான்மை முஸ்லிம்கள் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளாக வாழ்கின்றார்கள் என்றும் —

அவர்களின் வாக்குகளை நம்பியே தாம் கடந்த தேர்தலில் போட்டியிட்டதாகவும் —

ஆனால் அகதி முகாம்களில் உள்ள வாக்காளர்களின் கையெழுத்து கிராமசேவையாளர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டிருந்தார் என்றும் —

எனினும் இதற்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறப்பட்டது என்றும் —

இவ்வாறான நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்த முஸ்லிம் வாக்காளர்களைக் கட்டுப்படுத்த ஒரு சதி மேற்கொள்ளப்பட்டது என்றும் மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் அன்று முஸ்லிம்கள் வாக்களிக்கச் சென்ற போது வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒழுங்காக நடைபெற்றிருந்தால் யாழ். மாவட்டத்தில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஐவராவது தெரிவாகி இருப்பார்கள் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ)

இராணுவத்துக்கு எச்சரிக்கைமணி
அடித்துள்ள சமாதானப் பேச்சு

கொழும்பு பிரபல ஆங்கில வார இதழ் கண்ணோட்டம்

"இராணுவத்துக்கு எச்சரிக்கை மணியை அடித்துள்ள சமாதான பேச்சுக்கள்" என்ற தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் எழுதிய கண்ணோட்டத்திலிருந்து சில பகுதிகள் வருமாறு...

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது என்று பிரதமர் சந்திரிகா எடுத்த முடிவு ஆயுத படையினரின் உள்ளேயும் வெளியேயும் சாதக, பாதக எதிரொலிகளை உருவாக்கியுள்ளது.

பிரதமரின் முடிவை துணிச்சலானது எனப் பலர் பாராட்ட — வேறு சிலர் அதனை மூடத்தனமான முடிவு என்று விமர்சித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையை எப்படிக் கையாள வேண்டும் என்பது குறித்து இராணுவத் தலைமைப்பீடத்தில் மூன்று தெளிவான அபிப்பிராயங்கள் உள்ளன.

விடுதலைப் புலிகளுடன் கடந்த காலத்தில் நடத்திய பேச்சுக்களையும் யுத்தங்களையும் அடிப்படையாகக் கொண்டே இந்த அபிப்பிராயங்கள் அமைந்துள்ளன.

பெரும்பாலும் இந்த கருத்துக்கள் அவரவர்களின் சொந்த நிலைப்பாட்டுக்கு ஏற்பவே உள்ளன.

வடக்கு - கிழக்கு நிலைவரத்தை ஒரு குறிக்கோளுடன் அவதானித்து வருபவர்கள் பிரதமர் சந்திரிகாவின் முடிவை ஆதரிக்கின்றனர்.

இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தனித்த இராணுவ யுத்த தந்திரம் விடுதலைப் புலிகளை அதிகாரமுள்ள ஒரு சக்தியாக மாற்றிவிட்டது என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

1983 இல் திருநெல்வேலியில் ஒரு தாக்குதலில் 13 படையினரைக் கொல்லக்கூடியதாக இருந்த விடுதலைப் புலிகளின் தாக்குதல் வல்லமை —

பத்து ஆண்டுகள் கழிந்து 1993 நவம்பரில் பூநகரியில் ஒரு தாக்குதலில் 600க்கு மேற்பட்ட படையினரைக் கொல்லக்கூடியதாக வளர்ந்துள்ளதை அவர்கள் தங்களுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகின்றனர்.

ஆகவே தற்போதுள்ள ஒரே வழி அரசியல் உபாயங்களைக் கையாளுவதேயாகும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

உதை [illegible] முடியாதவை என்று [illegible] பட்டு வந்த [illegible] பிரச்சினை, தென் ஆபிரிக்க நிறவேறுபாடு ஆகியன பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்டமை அவர்களின் இச்சிந்தனைக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன.

இராணுவ யுத்த தந்திரம்

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த பிரதமர் சந்திரிகா முடிவு செய்ததைக் கண்டிக்கும் தரப்பினர், இந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் அரசுடன் பேச முன்வந்திருப்பது அவர்களின் சாதுரியமான நடவடிக்கை என்று கூறுகின்றனர்.

பத்து ஆண்டுகால யுத்தத்தின் பின்னர்தான் இந்திய இராணுவம் படித்தது போன்று இலங்கை இராணுவமும் கெரில்லாக்களுடனான அவர்களின் பாணியில் மரபு வழியல்லாத யுத்தத்தை நடத்த கற்றுக்கொண்டுள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளும் மரபுவழி இராணுவ யுத்த தந்திரங்களில் நன்றாக வளர்ச்சி கண்டுள்ளார்கள்.

இராணுவத்தில் உள்ள சந்தேகமனப்பான்மை கொண்டவர்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட போர்த் தளபாடங்கள் மூலமும் [illegible] மூலமும்— யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியும் என்று நம்புகின்றனர்.

மூன்றாவதாக, சிறு குழுவினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசியல் - இராணுவ யுத்ததந்திர முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளுடனான பேச்சு பலனளிக்காது என்று அவர்கள் நம்புகின்றனர். விடுதலைப் புலிகள் பலவீனமான முறையில் இருக்கும்போது தான் அவர்களுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும். என்று அவர்கள் நம்புகின்றனர்.

1990 ஜூன் மாதம் யுத்தம் மீண்டும் ஆரம்பமானதன் பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது என்று அரசு எடுத்த மிக முக்கிய முடிவு இது என்பதில் சந்தேகமேயில்லை.

இப்படியான துணிச்சலான முடிவை எடுத்ததற்காக திருமதி சந்திரிகா பாராட்டப்பட வேண்டியவராகின்றார். இப் புதிய முயற்சியில் அவர் தமது சொந்த அரசில் உள்ள பலவீனங்களையும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

ஐ. தே. க பிரசாரம்
20 இல் ஆரம்பம்

கொழும்பு, செப். 14

ஐக்கிய தேசியக்கட்சி தனது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திஸநாயக்கா, பிரசாரஉத்திகள் பற்றி கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு உறுப்பினர்களுக்கு விளக்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

நோர்வே செஞ்சிலுவை
அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப். 14

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் புனர்வாழ்விற்கு நோர்வே நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் நிதியுதவியை வழங்கியுள்ளது.

கிளாலி, நாவாந்துறை யாழ். கரையோரப்பகுதி போன்ற இடங்களில் இப்பகுதி மக்கள் தற்சமயம் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்த நோர்வே நாட்டு செஞ்சிலுவை சங்கத்தின் பிரதிநிதிகள் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ். கிளையின் உதவியுடன் இந்நிதியை இடம் பெயர்ந்த தீவுப் பகுதி மக்களுக்கு வழங்கினார்கள்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 700ரூபா வீதம் 162 குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-17)

கணனி பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப் 14

''கணனித் தொழில் நுட்பத்தின் இன்றைய நோக்கு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 11-00மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகவிரிவுரை மண்டபத்தில் கலாநிதி ந. அன்பழகன் உரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 'பி' பிரிவு இதனை ஏற்பாடு செய்துள்ளது. (இ)

வீதிகள் திருத்தம்

வல்வெட்டித்துறை செப் 14

வடமராட்சியின் பழுதடைந்த நிலையிலுள்ள பிரதான வீதிகள் ஒழுங்கைகள் போன்றவை துரிதகெதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (இ-155)

வேம்படி மகளிர் கல்லூரி
பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 14

வேம்படி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

இங்கு கல்விகற்று 1991, 1992 ஆம் ஆண்டு பரீட்சைகளில் சகல துறைகளுக்கும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிகளை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன் கல்லூரி அலுவலகத்தில் அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. [இ 4]

தும்புக்கயிறு
தொழிற்சாலை
மீண்டும் ஆரம்பம்

அராலி, செப். 14

அராலி [illegible] தும்புக் கயிற்றுத் தொழிற்சாலையின் உற்பத்தியை மீண்டும் ஆரம்பிக்க வலி. மேற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுகைத்தொழில் இலாகாவால் நடத்தப்பட்ட இத் தொழிற்சாலை நீண்டகாலமாக மூடப்பட்டு இருந்தது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான தும்பு கொண்டு வரப்பட்டு அடுத்த வாரம் உற்பத்தி ஆரம்பிக்கும் எனவும் அறிய வருகிறது. (ச 13)

விபத்தில் காயம்

தென்மராட்சி, செப். 14

வீதியில் வேகமாகச் சென்ற லொறியின் சில்லு எதிரே வந்த சைக்கிளுடன் மோதியதில் சைக்கிளோட்டி காலில் காயமுற்றார்.

மருதங்கேணியிலிருந்து வந்த மீன் வியாபாரியான புத்தூர் ஆவரங்காலைச் சேர்ந்த ப. வைரமுத்து (வயது 49) என்பவரே காயமடைந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி காலை 9 15 மணிக்கு மீசாலை வேம்பிராயில் இச்சம்பவம் இடம் பெற்றது. (ச-117)

சைவம் தழைத்து......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வங்கி, கொழும்பு), பவானி (பல்கலைக்கழகம், கொழும்பு), செல்வேந்திரன் (பல்கலைக்கழகம், மொரட்டுவ), ஜனனி (உயர்கல்வி, கொழும்பு) ஆகிய நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையானார்.

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சிநெறிப் பகுதியில் எழுதுநராகவும், தரப்படுத்துபவராகவும், பரீட்சிப்பவராகவும், பதிப்பாளராகவும் அவர் கடமையாற்றினார்.

1966 ஆம் ஆண்டு முதல் இலங்கை வானொலியிலும் பின்பு தொலைக்காட்சிச் சேவையிலும் சமய உரைகளை நிகழ்த்தினார்; புராண நாடகங்களிலும் பங்குபற்றினார்.

1980 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் எம். ஏ. பட்டதாரியானார்.

பெற்ற பட்டங்கள்

இவர் சைவசமய நிறுவனங்கள் சார்பில் சைவப் பெரியார்களால் ''சிவஞான வாரிதி'' (1963), ''சைவசித்தாந்த காவலன்'' (1978), ''செஞ்சொற் கடல்'' (1988) ''ஞானசிரோன்மணி'' (1993) என்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை கொம்பனித் தெரு, சைவ முன்னேற்றச் சங்கம், ஸ்ரீ சண்முகநாத ஞானசபை என்பவற்றில் உபதலைவராகவும், அகில இலங்கை சைவ காங்கிரசின் செயலாளராகவும், திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையின் ஆலோசகராகவும் பணி புரிந்தார்.

மலேசியா, சிங்கப்பூர் முதலிய சைவத்தமிழ் வழங்குகின்ற தேசங்களில் சமயப் பேருரைகள், தொடர்பிரசங்கங்கள் என்பன நடத்தி அங்கு வாழ் மக்களின் பெரும் மதிப்பிற்குள்ளானார்.

எழுத்தாளர் உதவிவேண்டி வந்தவேளை, அவர்களது எண்ணங்களை சிரமேற் கொண்டு நூல் உருவம்பெற ஆவன செய்தும், புகழ்க் கொடி நாட்டியிருந்த காலை, கனடாவாழ் சைவத் தமிழ் மக்களின் பிரார்த்தனை நிறைவு செய்ய எண்ணிக் கனடா செல்ல இருந்த சமயம் காலன் வசப்பட்டார்;

வாழ்வாங்கு வாழ்ந்தவர்

தன்னை வளர்த்து ஆளாக்கிய மஞ்சவனப்பதி முருகனை அரசினர் சைவசமய நூலில் இடம்பெற வைத்து தெய்வ நன்றிக்கடன் ஒப்பிய 'சைவத் தமிழ்க்குச் செல்' குருசுவாமி மறைந்த கொடுஞ் செய்தியைச் செவிமடுத்த கொக்குவில் வாழ் மக்கள் துயரக் கடலில் ஆழ்ந்தனர்.

குருசுவாமி அவர்களின் ஆன்மா வானுறையும் தெய்வத்துள் அடையும் என்பது பேருண்மை எனக.

★

தமிழரின் உண்மைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பற்றி எமக்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார்? தமிழ் மக்களின் உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடி வருபவர்கள் யார்? இதனை இப் புதிய அரசாங்கம் உணர்ந்திருக்கும் என்றே நான் நம்புகிறேன்.

எனவே தமிழரின் உண்மையான பிரதிநிதிகளான எம்முடன் அரசு நேரடியாகப் பேசுவதையே நாம் விரும்புகின்றோம்.

அந்தப் பேச்சுக்கள் பயனுள்ளதாக — அர்த்தம் நிறைந்ததாக — அமையும்

பிரேமா அரசுடனான பேச்சுக்களை நாம் இடையில் முறித்துவிடவில்லை

★ கேள்வி:- உங்களுக்கும் பிரேமதாஸா அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளை நீங்கள் பாதியில் முறித்து விட்டீர்கள். எனவே அரசு உங்களுடன் ஏன் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் இறங்க வேண்டும்?

பிரபா:- பிரேமதாஸா அரசுடன் நடந்த பேச்சுக்களை நாம் முறித்து விட்டோம் என்று கூறுவது தவறு. நாங்கள் பேச்சுக்களை இடையில் முறிக்கவில்லை. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றிருக்கின்றன. இந்த இரண்டு ஆண்டுகால பேச்சுக்களின்போது தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் எதுவுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பிரேமதாஸா அரசு தமிழரின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக எதுவிதத் தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. இதனால் பேச்சுக்கள் அர்த்தமில்லாமல் இழுபட்டு இறுதியில் செயல் இழந்து போயின. இதுதான் உண்மையில் நடந்தது. நாங்கள் தான் நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டதாக கூறப்படுவது எல்லாம் வெறும் விஷமப் பிரச்சாரமே!

எல்லாப் பேச்சுவார்த்தைகளின் போதும் நாம் எமது மக்களின் நலன்களையே முதன்மைப்படுத்தி வந்துள்ளோம். எமது மக்கள் சமாதானமாக — கௌரவமாக — உரிமையுடன் பெற்று வாழவேண்டும் என்பதையே வலியுறுத்தி வந்துள்ளோம்.

சிங்கள அரசுகள் எமது மக்களின் நியாயமான — அடிப்படையான — உரிமைகளை ஏற்று நீதி வழங்க மறுத்ததால் தான் பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை. காலம் காலமாக தமிழர்கள் தான் சிங்கள ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள்.

ஒப்பந்தங்களை உடைத்து உடன்பாடுகளை முறித்து சிங்கள அரசுகள்தான் தமிழருக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்து வந்திருக்கின்றன. இந்த வரலாற்று உண்மையை எவரும் மறுக்கமுடியாது.

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்கு நீதி வழங்க புதிய அரசாங்கம் உறுதி பூண்டிருந்தால் விடுதலைப் புலிகள் ஏமாற்றி விடுவார்கள் என அச்சம் கொள்ளத் தேவையில்லை.

பூநகரிப் படையினரை வாபஸ்பெற்று சங்குப்பிட்டிப் பாதையை திறக்கலாம்

★ கேள்வி:- யாழ்ப்பாணத்துக்கும் தமிழீழப் பகுதிகளுக்கும் இடையே போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்படுவதற்கு புலிப் படையினர் தடையாக இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. உங்கள் பதிலென்ன?

பிரபா:- இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மை எதுவும் இல்லை. யாழ். குடாநாட்டுக்கும், வடமாநிலத்துக்கும் இடையே ஆனையிறவு, பூநகரி என்ற இரண்டு தரைப் பாதைகள் உள்ளன. இந்த இரண்டு பாதைகளையும் சிங்கள இராணுவம் மூடிவைத்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தை முற்றுகையிடும் நோக்கில் இந்த பாதைகள் ஊடாக மக்கள் போக்குவரத்தை இராணுவம் தடுத்து வைத்துள்ளது. அதனால்தான் மக்கள் கிளாலி கடற்பாதை வழியாகப் பயணம் செய்து வருகிறார்கள்.

இந்தக் கடற்பயணத்தைத் தடுப்பதற்காக சிங்கள ஆயுதப் படைகள் நடத்திய படுகொலைகள் ஏராளம். கிளாலி கடற்பாதை வழியாக எமது மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்காக எமது கடற்புலிப் போராளிகள் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறார்கள் எத்தனையோ வீரசாதனைகளைப் படைத்திருக்கிறார்கள்.

இன்று கிளாலிக் கடற்பரப்பு எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. எமது போராளிகளின் பாதுகாப்புடன் மக்கள் இந்தப்பாதை வழியாக பயமின்றிப் பயணம் செய்து வருகிறார்கள்.

ஆனால் தரைப்பாதை ஒன்றை திறந்து எமது மக்களினதும் வாகனங்களினதும் போக்குவரத்தை இலகுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் நாம் அதை வரவேற்போம்.

இராணுவ சோதனைகள், கெடுபிடிகள் எதுவுமின்றி மக்கள் சுதந்திரமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படவேண்டும். இந்த வகையில் பூநகரியில் தரித்து நிற்கும் இராணுவத்தினரை வாபஸ்பெற்று, சங்குப்பிட்டிப் பாதையை அரசாங்கம் திறந்து விடுமானால், எமது மக்கள் அதனை பெரிதும் வரவேற்பர் என்பது திண்ணம்.

சட்டவிரோதமாக நடந்த தேர்தலில் பங்குகொள்ள நாம் விரும்பவில்லை

★ கேள்வி:- அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் கலந்து கொண்டிருக்கலாமே! ஏன் போட்டியிடவில்லை?

பிரபா:- தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டவேண்டும், அதன் பின்வரே தேர்தலில் பங்கு கொள்வது பற்றி சிந்திக்கலாம்.

நீண்டகாலமாகவே நாடாளுமன்ற அரசியலில் தமிழர்கள் பங்குபற்றி வந்துள்ளார்கள். ஆனால் நாடாளுமன்ற அரசியல் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தவறிவிட்டது — அது மட்டுமல்லாமல் நாடாளுமன்றம் மூலமாகவே தமிழ் மக்களுக்கு விரோதமான பல ஒடுக்குமுறைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. காலம் காலமாக ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நலன்களையும் அபிலாஷைகளையுமே நிறைவு செய்து வந்து இருக்கிறது. தமிழர்களின் நலன்களை நசுக்கிவந்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தமிழர்கள் மீண்டும் நாடாளுமன்றம் செல்வதில் எவ்வித பயனும் ஏற்படப்போவதாக நாம் கருதவில்லை. அதுவும் வடக்கு-கிழக்கில் நியாயமற்ற முறையில், சட்டவிரோதமாக நிகழ்ந்த தேர்தலில் நாம் பங்குகொள்ள விரும்பவில்லை.

ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் முஸ்லிம்கள் வடக்கே திரும்பி வரலாம்

★ கேள்வி:- நான் அண்மையில் புத்தளத்தில் உள்ள முஸ்லிம் அகதி முகாம்களுக்குச் சென்றிருந்தேன். யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள். நான் பேசிய அனைவருமே தாங்கள் யாழ்ப்பாண மக்களுடன் நேசமாகவும் பாசமாகவும் வாழ்ந்ததாகக் கூறி வேதனைப்பட்டார்கள்.

தங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்ற உறுதி வழங்கப்பட்டால் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வரவே விரும்புவதாகவும் கூறினார்கள். சுமுகமான நிலைமை வந்தால் இந்த மக்களை அவர்களின் சொந்த ஊருக்கு — அதாவது யாழ்ப்பாணத்துக்கு வர அனுமதிப்பீர்களா?

பிரபா:- யாழ்ப்பாணம் இந்த மக்களின் சொந்த மண். துரதிர்ஷ்டவசமாக சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் இந்த மக்கள் அகதிகளாக வேண்டிய நிலை எழுந்தது. இதையிட்டு நாம் வருந்துகின்றோம். ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் இந்த மக்கள் யாழ்ப்பாணம் திரும்பி வருவதை அனுமதிப்போம்.

போர்ச் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 8 லட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தீவுப் பகுதி மற்றும் வலிகாமம் வடக்கில் இராணுவம் குடியிருப்பு நிலங்களை ஆக்கிரமித்துள்ளதால் இந்த மக்கள் குடிபெயர்ந்து அகதிகளாக மாறியுள்ளனர்.

இந்த தமிழ் அகதிகளில் ஒரு கணிசமான தொகையினர் முன்பு முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இடங்களில் தஞ்சம் புகுந்து இருக்கிறார்கள். சிங்கள இராணுவம் தாம் ஆக்கிரமித்த குடியிருப்புப் பகுதிகளில் இருந்து வெளியேறுமாயின் தமிழ் அகதிகள் தமது கிராமங்களுக்குத் திரும்பிச் செல்ல வசதி ஏற்படும். அப்படியான ஒரு சமூக சூழ்நிலை ஏற்பட்டால் அகதிகளாக உள்ள முஸ்லிம் மக்கள் யாழ் திரும்பி வர நாம் அனுமதிப்போம்.

தமிழர் மீது போரைத் திணித்தவர்களே அதற்கு முடிவுகட்ட முன்வர வேண்டும்

★ கேள்வி:- நாடு எங்கிலும் — வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி தெற்கிலும் சரி இந்தப் போருக்கு முடிவு ஏற்பட வேண்டும்; சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற சிந்தனை இப்போது மேலோங்கி நிற்கிறது. இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் தெற்கில் வாழும் சிங்கள மக்களுக்கு — அரசியல்வாதிகளை விடுங்கள் — சாதாரண சிங்களப் பெருங்குடி மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

பிரபா:- சாதாரண சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும். இந்தத் தேர்தல் முடிவுகளும் அதனையே நிரூபித்துக் காட்டுகின்றன. நாமும் சமாதானத்தையே விரும்புகின்றோம்.

ஒரு நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகின்றோம். இன்று சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பது போர்.

எனவே போர் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். யார் இந்தப் போரை தமிழ் மக்கள் மீது திணித்தார்களோ அவர்களே இந்தப் போருக்கு முடிவு கட்ட முன்வர வேண்டும்.

போர்மூலம், இராணுவ அடக்குமுறை மூலம், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை சிங்களதேசம் உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வதன் மூலமே இன்றைய இன நெருக்கடிக்குத் தீர்வு காணலாம். சமாதான வழிமூலமே இதனைச் சாதிக்கலாம். இதனைச் சிங்கள இனவாத அரசியல்வாதிகளுக்கும் இராணுவவாதிகளுக்கும் சிங்களமக்கள் உணர்த்த வேண்டும்.

நாம் சிங்களமக்களை நேசிக்கிறோம். நாம் சிங்கள மக்களுக்கு விரோதமானவர்களல்லர். சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் எழுந்த முரண்பாடுகளுக்கும் பகைமைக்கும் இனவாத சக்திகளே காரணம்.

இந்த இனவாதச் சக்திகளை சிங்கள மக்கள் இனங்கண்டு ஒதுக்கித் தள்ளவேண்டும். அப்பொழுதுதான் இந்நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஏற்படும்.

ஈ. பி. டி. பி- புளொட் ஆயுதங்கள் உடனடியாக களையப்பட மாட்டா

ஆனால் வட-கிழக்குக்கு வெளியே ஆயுதம்வைத்திருக்கத்தடை

ஆயுதம் வைத்துள்ள தமிழ் ராணுவக் குழுக்களிடம் இருந்து உடனடியாக ஆயுதங்கள் களையப்படமாட்டா.

எனினும் இக் குழுக்கள் வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்படமாட்டாது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் [illegible] களில் உள்ள சிவில் [illegible] பாதுகாப்பு வழங்குவதற்கு இந்த ஆயுதக் குழுக்கள் தேவைப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

என்றாலும் இக் குழுக்கள் கொழும்பில் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள [illegible] ஆயுதக் குழுவும் — [illegible] பாதுகாப்புப் படையினருடன் புளொட் ஆயுதக் குழுவும் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

செயற்திட்டம்

யாழ்ப்பாணம், செப் 14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆரம்பக்கல்வி மன்ற செயற்திட்டக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

பாரதி விழா

புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையத்தினால் [illegible] படும் பாரதி விழா இன்று புதன்கிழமை மாலை [illegible] மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறும்.

ராஜ கிராமத்தில் கிராமப் பாசறை

யாழ்ப்பாணம், செப். 14

கரவெட்டி ராஜ கிராம கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சிகள் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி சண்டில் ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

மாலை விளையாட்டு நிகழ்ச்சிகளும், இரவு கருத்தரங்களும் இடம்பெறும். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் பல நடைபெறும். (ஓ-4)

சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், செப் 14

வேப்பமரம் ஒன்றில் விறகு வெட்டிக் கொண்டிருந்த போது தவறிக் கீழே விழுந்த மரணமானதாகக் கூறப்படும் சிறுவன் ஒருவரின் சடலம் நேற்று இரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

அந்தச் சிறுவனின் தலையிலும் கழுத்திலும், காயங்கள் காணப்பட்டன.

மரத்தில் இருந்து விழுந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தபோது சிறுவன் இடைவழியில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணிக்கு பருத்தித்துறை கற்கோவளத்தில் நடைபெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த அம்பிகாபதி சுபாரஞ்சன் (வயது 14) என்ற சிறுவனே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஓ-15)

நல்லை ஆதீன விசேட விருதுகள்

யாழ்ப்பாணம், செப். 14

நல்லை ஆதீனத்தின் 29 ஆவது பீடாரோகண விழா நல்லை ஆதீன மண்டபத்தில் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவை ஒட்டிபல்மொழிப் புலமை மிக்க சிவாச்சாரியார்களைக் கௌரவித்து முதல் தடவையாக நல்லைக்குருமணி விசேட விருதுகளை ஐந்து குருமார்களுக்கு வழங்கினார்.

நல்லை ஆதீன இலச்சினை பொறிக்கப்பட்ட விசேட விருதுகளைப் பெற்ற சிவாச்சாரியர்கள் வருமாறு.

கருவில் சிவஸ்ரீ. கோ. நடராசா குருக்கள் திருநெல்வேலி சிவஸ்ரீ. த. சண்முகரத்தினக் குருக்கள், மாவை சிவஸ்ரீ ஐ. வைத்தியநாதக் குருக்கள், கோப்பாய் சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், மட்டுவில் சிவஸ்ரீ அ. சிவ ராமிக்குருக்கள் ஆகியோர். (க-111)

பொன்னாடை போர்த்து கௌரவம்

கரணவாய் கிழக்கு உச்சில் அம்பாள் ஆலய கும்பாபிடேக தின உற்சவம் ஸ்ரீ லஸ்ரீ தியாகராச சபேசக் குருக்களால் கடந்த மாதம் 19 ஆம் திகதி சிறப்பாக நடத்தப்பட்டது.

உற்சவத்தில் சமயச்சொற்பொழிவு நிகழ்த்திய இணுவிலூர் வித்துவான் இ திருநாவுக்கரசுவிற்கு யாழ் மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் ஸ்ரீ செவ்வந்திநாதக் குருக்கள் சுவாமிநாதன் பொன்னாடை போர்த்தி சிறப்புச் செய்தார்.

பொருளாளர் திரு.மகேந்திரன் மானையிட ஆலய நிர்வாக முகாமையாளர் திரு கார்த்திகேசு காளாஞ்சி வழங்கிக் கௌரவித்தார்(க)

மலசல கூடங்கள்

வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள சத்தியக்காடு துறட்டிப்பனை ஆலய இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்களுக்கு ஒரு லட்சம் ரூபா செலவில் மலசலகூடங்கள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

நீதிமன்றை அவமதித்தவருக்கு விசித்திர தண்டனை!

கொழும்பு, செப். 14

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குவிசாரணை நடந்து கொண்டிருந்த போது நீதிமன்றத்தினுள் வைத்து செலுலர் தொலைபேசியைப் பயன்படுத்திய நபர் பொலீஸாரால் கைது செய்யப் பட்டார்.

எம். எச் நல்பர் என்ற அந்த நபர் மீது நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட அந்த நபருக்கு நீர்கொழும்பு பிரதம நீதிவான் லலித் ஜயசூரியா புதுமையான தண்டனை ஒன்றை] வழங்கினார்.

நீதிமன்றம் கலைந்ததும் நீதிமன்ற அலுவலகத்தை பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும் என்பதே அத் தண்டனையாகும்.

செலுலர் தொலைபேசி மூலம் குறிப்பிட்ட அளவு சுற்றாடலுக்குள் கம்பியில்லாது உரையாடலை மேற்கொள்ள முடியும். (இ-எ)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் —20மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட— மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு ஐந்து மைதானங்களில் ஆரம்பமாகுகின்றது. இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ புனித சார்ள்ஸ் ம. வி. எதிர் கனகரத்தினம் ம. ம வி. —கனகரத்தினம் ம. வி. ம. மைதானத்தில்

★ வைத்தீஸ்வராக் கல்லூரி எதிர் யாழ் மத்திய கல்லூரி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில்

★ ஏழாலை ம வி. எதிர் வட்டு இந்துக் கல்லூரி— மகாஜனா மைதானத்தில்

★ சங்கானை சிவப்பிரகாச ம. வி. எதிர் இணுவில் மத்திய கல்லூரி — மானிப்பாய் இந்து மைதானத்தில்

★ விக்ரோறியா கல்லூரி எதிர் சிதம்பராக் கல்லூரி— சோமஸ்கந்தா கல்லூரி மைதானத்தில்

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3.00 மணி:- சுன்னாகம் மயிலணி ம. வி. எதிர் ஏழாலை ம. வி, (15 வயதுப் பிரிவு)

★ 4.00 மணி:- சுன்னாகம் மயிலணி ம. வி. எதிர் இணுவில் மத்திய கல்லூரி (17 வயதுப் பிரிவு)

★ 5 00 மணி:- இணுவில் மத்திய கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் ம. வி. (19 வயதுப் பிரிவு) (உ-20)

வடபகுதிக்கு யூரியாவுக்கு பதிலாக வேறுவகை உரம்!

அனுப்பப்படும் என்கிறார் ஹமில்டன்

கொழும்பு, செப். 14

யூரியாவிற்குப் பதிலாக வேறொரு உரத்தை வடக்குக்கு அனுப்புவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க தெரிவித்ததாக 'திவயின' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உரத்தின் மூலம் வடக்கின் விவசாயிகள் உரிய பலனைப் பெறமுடியும் என்று அவர் கூறியுள்ளார்.

பொருளாதாரத் தடையைத் தளர்த்தியது குறித்து வடக்கு மக்களின் பெரும்பாலானவர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர் என்றும் ஹமில்டன் குறிப்பிட்டுள்ளார். (ஓ-9)

வட-கிழக்கு மாகாணசபை "ரெண்டர்" கோரத்தடை

புதிய அரசாங்கம் உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 14

புதிய கட்டடங்கள் அமைக்கவோ, திருத்தவேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் எதையும் கோர வேண்டாம் என்று புதிய அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையினரால் புதிய கட்டடங்கள் அமைக்கவும் — சேதமடைந்த கட்டடங்களைத் திருத்தவும் — புதிய வேலைகளுக்கும் — "ரெண்டர்" முறையில் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு வந்தன

இந்த "ரெண்டர்"களில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் — அவை குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் — புதிய அரசாங்கம் தெரிவித்து உடனடியாக 'ரெண்டர்' கோரும் முறையை நிறுத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ளது (ஓ-3)

உடன்பாடு இல்லாமல் போர் நிறுத்தம் வேண்டாம்

ராணுவ அதிகாரிகள் ஆலோசனை

லண்டன், செப் 14

தற்போதைய பிரச்சினைக்கு உடன்பாடு ஏற்பட்டாலன்றி போர்நிறுத்தம் செய்யக்கூடாது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரிகள் அரசுக்கு மேற்கண்டவாறு ஆலோசனை கூறியுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

கொழும்புச் செய்தியாளரை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. மேற்கண்டவாறு தெரிவித்தது. [ஓ-3]

மரண அறிவித்தல்

முத்து செல்லத்துரை

மன்னாரை பிறப்பிடமாக கொண்டவரும் குருநகர், யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான முத்து செல்லத்துரை 13-09-94 அன்று காலமானார்.

இவர் நீட்டாவின் அன்பு கணவரும் தேவி, தர்மா, புஸ்பா ராஜா, ஜெசி, ரெஜி, பாவா, ஆகியோரின் அன்பு தந்தையும் றோனி (பிரான்ஸ், டக்ளஸ் (டென்மார்க்), குணம் (பேசாலை), மல்விகா (பிரான்ஸ்), ரவி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் சுவிஸ்ரா, காமல், இரிசாந்தி, (கொழும்பு), பிராங்கி, நிசாந்தன் (மன்னார்), நிதர்சன், நிவேதா (கொழும்பு), ஜெறோமி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. ரகு
(மகன்)

இல 1, புதிய வீடமைப்புத் திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

(32886)

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/5 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.